பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆனி 28 (11—7—72) செவ்வாய் வெளியூர்: ஆனி 29 (12—7—72) புதன் [இதழ்: 23

## காவிரி நீர்ப் பிரச்சினை-- மத்தியக் குழுவினர் வருகை

சென்னை, ஜூலை 11—

காவிரி நீர்ப் பிரச்சினை பற்றிய விவரங்களை நேரில் ஆராய்ந்து அறிவதற்காக மத்திய அரசு அமைத்துள்ள குழுவினர், இத் திங்கள் 19-ம் நாள் முதல் 22-ம் நாள் வரையில் சென்னையில் தங்குவர்; இப்பிரச்சினை தொடர்பாக மாநில அரசு அமைத்துள்ள குழுவினருடன் அவர்கள் விவாதிப்பர்.

இதற்கிடையில், காவிரி நீர்ப் பிரச்னையில் தமிழக அரசின் நிலை என்ன என்பது பற்றிய முக்கிய விவரங்களை அக்குழுவினர் திரட்டுவர்.

# நாவலருக்கு 53-வது பிறந்த நாள்

## நாடு வழங்கிய நல்வாழ்த்து

### படிக்க வசதியற்ற ஏழைக் குழந்தைகளுக்கு நோட்டுப் புத்தகங்கள் -- சிலேட்டுகள் அன்பளிப்பு

சென்னை, ஜூலை 11—

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளரும் – கல்வியமைச்சருமான நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தமது 53-வது பிறந்த நாள் விழாவை இன்று கொண்டாடினர்.

முதற்பணியாக நாவலர் அவர்கள், இன்று விடியற்காலையில் - தமது துணைவியாருடன் அண்ணா கல்லறைக்குச் சென்று மலர் வளையம் வைத்து வணங்கினர்; பின்னர், அண்ணா சாலையிலுள்ள அண்ணா அவர்களின் சிலைக்கு மலர் மாலை அணிவித்துக் கைகூப்பி வணங்கி இல்லம் திரும்பினர்.

கழகத் தலைவரும் – முதலமைச்சருமான கலைஞர் அவர்களும் மற்றும் அமைச்சர்களும் அடையாற்றிலுள்ள அவரது இல்லத்திற்குச் சென்று மலர் மாலைகள் அணிவித்துப் பிறந்த நாள் வாழ்த்துக்கள் கூறினர்.

கழகப் பொருளாளர் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் சார்பிலும் மலர் மாலை அணிவிக்கப்பட்டு – பிறந்த நாள் வாழ்த்துக் கூறப்பட்டது.

சட்டப் பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் – மேலவைத் தலைவர் சி. பி. சிற்றரசு ஆகியோரும் மாலைகள் அணிவித்தும் பிறந்த நாள் வாழ்த்துக்கள் கூறினர்.

மாநகராட்சி மேயர் – துணை மேயரும் மலர் மாலை அணிவித்துப் பிறந்த நாள் வாழ்த்துக் கூறினர்.

மற்றும் நாடாளுமன்ற – சட்டப் பேரவை, மேலவை உறுப்பினர்களும், மாநகராட்சி உறுப்பினர்களும், மாவட்டச் செயலாளர்களும் – கழக முன்னணித் தோழர்களும், தோழமைக் கட்சித் தலைவர்கள் – பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் – தொழிற் சங்க அமைப்புகளின் தலைவர்கள் – பத்திரிகைத் துறையினர் ஆகியோரும் வந்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

நாவலர் அவர்களை வாழ்த்தி நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஏராளமான வாழ்த்துத் தந்திகள் வந்தன.

### பள்ளிச் சிறுர்கட்கு நோட்டுகள் -- சிலேட்டுகள்

நாவலர் அவர்கட்குத் தங்கள் அன்பைக் காட்டும் வகையில், மாலைகள் -- கைத்தறி ஆடைகள் அணிவிப்பதற்குப் பதிலாகப் பள்ளிச் சிறுர்கட்குப் பயன்படும் வகையில் நோட்டுப் புத்தகங்கள் -- சிலேட்டுகள் -- எழுதுகோல்கள் வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளுக்கு இணங்க, அறநிலையத் துறையின் சார்பில் 50,000 நோட்டுப் புத்தகங்கள் -- 5,000 சிலேட்டுகள் வழங்கப்பட்டன.

திருத்தணி கோவிலின் சார்பில் 10,000 நோட்டுப் புத்தகங்கள் -- 5,000 சிலேட்டுகள் வழங்கப்பட்டன.

மயிலை கபாலீசுவரர் கோவிலின் சார்பில் 20,000 நோட்டுப் புத்தகங்கள் -- 10,000 சிலேட்டுகள் வழங்கப்பட்டன.

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலின் சார்பில் 20,000 நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

### விழாக் குழுவின் சார்பில் ...

நாவலர் பிறந்த நாள் விழாக் குழுச் சார்பில் 20,000 நோட்டுப் புத்தகங்களும் -- 5,000 சிலேட்டுகளும் -- 12,000 பென்சில்களும் 10,000 எழுதுகோல்களும் வழங்கப்பட்டன.

### நிழற் குடைகள் அன்பளிப்பு

பஸ் பயணிகள் தங்குவதற்கு -- பிறந்த நாள் விழாவினையொட்டி -- நிழற் குடைகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன; 85-வது வட்டத்தின சார்பில் ஒன்றும் -- 'தினத் தந்தி' சார்பில் ஐந்தும் -- சுந்தர்லால நகாதா சார்பில் ஒன்றும் -- மற்றும் கழகத் தோழர்கள் மூவர் சார்பில் மூன்றும் வழங்கப்பட்டன.

### நிலக் கணக்கியல் கருவிகள்

ஜெயலட்சுமி.... நிறுவனத்தின் சார்பில் வெள்ளிக் கிரீடம் ஒன்றும், நிலக் கணக்கியல் கருவிகளும் வழங்கப்பட்டன.

### மேல படிப்புக்கு ரூ. 2,000

திட்டக்குடி ஊராட்சித் தலைவர் கிருட்டினசாமி அவர்கள், விருத்தாசலம் வட்டத்தில் எஸ்.எஸ்.எல்.சி. டீரீட்சையில் தேர்வு பெற்று மேல படிப்புக்குச் செல்ல இயலாத நிலையிலுள்ள ஏழை மாணவர்களுக்கு உதவுவதற்காக ரூ. 2,000 வழங்கினர்.

50 ஏழைக் குழந்தைகளுக்கு நாவலர் அவர்கள், இன்று நோட்டுப் புத்தகங்கள் -- கற்பலகைகள் -- பென்சில்கள் -- எழுதுகோள்கள் வழங்கினர்.

### குருவிக்காரர்கள் கோரிக்கை

குருவிக்காரர்கள் பலர் இன்று நாவலரைச் சந்தித்து -- திருச்சியில் தங்கள் இனத்தவருக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து தந்திருப்பதைப்போல், தங்கள் பிள்ளைகள் படிப்பதற்குரிய வசதிகளைச் செய்து தருமாறு கோரினர்; ஆவன செய்வதாக நாவலர் உறுதி கூறினர்.

---

கல்வியமைச்சர் நாவலர் பிறந்த நாள் செய்தி

# 'பகுத்தறிவு நெறியில் சமத்துவ வாழ்வு-- அறநெறி வகையில் சனநாயக முறை-- சம வாய்ப்பு வழியில் சமதர்ம நிலை-- வளரப்பாடுபட வேண்டும்'

## 'இந்தக் குறிக்கோளை அடைய எனது தொண்டினை என்றென்றும் உரிமை ஆக்குவதே என்னுடைய கடமையாகும்'

சென்னை ஜூலை 11—

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளரும் -- கல்வியமைச்சருமான நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தமது 53 வது பிறந்த நாள் விழாவையொட்டி நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள செய்தியில் கூறியிருப்பதாவது :—

"எனது 53-வது ஆண்டு பிறந்த நாளையொட்டி எனக்கு அன்பு வாழ்த்துக்களை வழங்கி என்னைப் பெருமைப்படுத்தியுள்ள நண்பர்கள் அனைவருக்கும் என் உளம்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பர்கள் அன்புள்ளத்தோடு என்னை வாழ்த்துகிறார்கள் என்றால், என்னிடத்தில் கடமை உணர்வையும் -- தொண்டாற்றும் தன்மையையும் மேலும் மேலும் எதிர்பார்க்கிறார்கள் என்பதுதான்.

நண்பர்கள் மனநிறைவு கொள்ளத்தக்க அளவுக்கு அவர்கள் விரும்பும் கடமைகளை நிறைவேற்றுவதற்கு உரிய அறிவும் -- ஆற்றலும் எனக்கு ஏற்படவேண்டுமே என்பதுதான எனக்கு இருக்கும் கவலையாகும்.



அறிஞர் அண்ணாவின் வழி நடக்கும் தொண்டன்' என்ற பெயர் இருந்தால, அதுவே வாழ்நாள் முழுவதும் எனக்குப் பேரின்பம அளிக்கும் பேறு ஆகும்.

சமூகத்திலே பகுத்தறிவு நெறிப்பட்ட சமத்துவ வாழ்வு -- பொருளாதாரத்தில் சம வாய்ப்பு வழிப்பட்ட சமதர்ம நிலை -- அரசியலிலே அறநெறி வகைப்பட்ட சனநாயக முறை வளரப் பாடுபடவேண்டும்.

எங்கும் தமிழ் -- எதிலும் தமிழ் ஒளி வீசவேண்டும்; நாட்டின் வறுமை -- ஏழ்மை -- இல்லாமை -- போதாமை -- அறியாமை ஆகியவற்றுக்கு அடிப்படைக் காரணமான கல்லாமை அறவே ஒழியவேண்டும்.

தமிழகம் வளம் பெற்று -- நலம் பெற்று -- அறிவு பெற்று -- ஆற்றல் பெற்று -- பெயர் பெற்று -- புகழ்பெற்றுத் திகழவேண்டும்.

இந்தக் குறிக்கோள்களை அடைய எனது சிறிய தொண்டினை என்றென்றும் உரிமை ஆக்குவதே என் கடமை எனக் கருதுகிறேன்."

---

# ஜூலை 15--'வன்முறை கண்டன நாள்' பொதுக்கூட்டங்கள்

## அமைச்சர்கள் -- தி. மு. க. தோழமைக் கட்சித் தலைவர்கள் கலந்துகொள்ளும் ஊர்கள்

"சென்னையில் 8—7—72 அன்று நடைபெற்ற தி.மு.க. --தோழமைக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுப்படியும், கழகத் தலைவர் கலைஞர் அவர்களின் அறிக்கைக்கேற்பவும் ஜூலை 15 சனிக்கிழமையன்று நாடெங்கும் நடைபெறும் 'வன்முறை கண்டன நாள்' பொதுக்கூட்டங்களில் கீழ்க்காணும் விவரப்படி முக்கிய ஊர்களில் அமைச்சர் பெருமக்களும் கழகத் தோழர்களும், தோழமைக் கட்சிகளின் தலைவர்களும் -- தோழர்களும் கலந்துகொள்வர்" என்று தி. மு. க. தலைமை நிலையம் அறிவிக்கிறது.

**சென்னை**

முதலமைச்சர் கலைஞர்
திருப்பூர் மொய்தீன் எம்.எல்.ஏ.
பி. கே. மூக்கையாதேவர் எம.பி.
டி. கே. சண்முகம் எம்.எல்.சி.
கடலூர் கி. வீரமணி
எஸ். எஸ். இராமசாமி படையாச்சி எம்.எல்.சி.
நீலநாராயணன் எம்.எல்.சி.

**திருச்சி**

அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்
அப்துல் வகாப் எம்.எல்.சி.
செல்வேந்திரன்
எம். எஸ். வெங்கடாசலம்

**நெய்வேலி, கடலூர்**

அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்
ஏ. கே. ஏ. அப்துஸ் சமது எம்.பி.
எம். செலவராசு எம்.எல்.ஏ.
பாபு கோவிந்தராசு எம்.எல்.ஏ.
துரை கதிரேசன்
ஆண்டி குருநாதன்

**கோயமுத்தூர்**

அமைச்சர் என். வி. நடராசன்
பீர் முகம்மது
எஸ். ஏ. இராசமாணிக்கம்
செல்வி கஸ்தூரி [எம்.எல்.சி.

**தஞ்சை**

அமைச்சர் சத்தியவாணிமுத்து
எம். எம். பக்கர் எம்.எல்.சி.
குப்புசாமி
ஜார்ஜ் கோமகன் எம்.எல்.சி.
எஸ். நடராசன் எம்.எல்.ஏ.

**ஈரோடு, மொடக்குறிச்சி**

அமைச்சர் ம. உ. சண்முகம்
மு. சின்னசாமி எம்.எல்.ஏ.
பி. எஸ். விசுவநாதன்
எம். சுப்பிரமணியன் எம்.எல்.ஏ.

(4-ம் பக்கம் பார்க்க)

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

திருவள்ளுவராண்டு 2003 ஆனி 28 (11—7—72) செவ்வாய்.

# காமராசரின் மிரட்டல்

"...கடற்கரையில் காமராசர், குறைந்தபட்சம் அவர் தலைமைவகித்த ஊர்வலத்தினர் நடத்திய வெறியாட்டங்களையாவது கண்டித்துப் பேசிக்கொண்டிருப்பார் என்று நம்புகிறேன்"

என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், 'முரசொலி' மூலம் அவர் எழுதும் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

அவர் அதனை எழுதிக்கொண்டிருந்த நேரத்தில்தான், கடற்கரையில் நடந்த கூட்டத்தில் காமராசர் பேசிக்கொண்டிருந்தார்.

"என்னைப் பார்த்தா நீ அப்படி நினைக்கிறாய்?" என்று கலைஞரைத் திருப்பிக் கேட்கிற வகையில் காமராசர் பேசியிருக்கிறார்!

காமராசரிடம் அந்தப் பெருந்தன்மையை எதிர்பார்க்க முடியாது என்பது கலைஞருக்கும் தெரியும்; என்றாலும், 'காமராசர் எப்போதும் காமராசராகவேயா இருப்பார்? சில நிமிட நேரமாவது, 'அண்ணா'வாக மாறுவிட்டாலும், குறைந்தபட்சம் சராசரி 'மனிதப் பண்பு'ட்னவது இருக்கமாட்டாரா' என்பதுதான் கலைஞரின் நம்பிக்கை.

அந்த நம்பிக்கையும் தவறானது என்று நிரூபித்துக் காட்டிவிட்டார் காமராசர்! 'காமராசர் என்றும் -- எப்போதும் காமராசர்தான்' என்பதை நிலைநாட்டிவிட்டிருக்கிறார்!

கடற்கரைக் கூட்டத்தில் அவர் திருவாய் மலர்ந்தருளியுள்ள மணிவாசகங்களைக் கவனிப்போம் :—

"விவசாயிகளின் போராட்டத்தை ஒடுக்க அராஜகங்களின்மூலம் தி. மு. க.-வினர் பயமுறுத்துகிறார்கள்; அதற்குப் போலீசும் உடந்தையாக இருக்கிறது; சர்க்காரே இதற்கு முழுப் பொறுப்பாகும்; இந்த நிலைமையைச் சகித்துக் கொண்டிருக்க முடியாது; இந்த நிலை நீடிக்குமானால், விவசாய சங்கத்தினரைவிடப் பெரியதோர் இயக்கத்திற்கு நானே பொறுப்பேற்று நடத்துவேன்."

"....151-வது சட்டப் பிரிவைக் காட்டி சர்க்கார் விளையாடுகிறது; இது நீண்ட காலத்துக்கு நீடிக்காது; பொய் வழக்குகள் போட்டால் சர்க்கார் அவமானப் படுத்தப்படும்."

"மாநில சுயாட்சி கேட்கும் முதலமைச்சர் கருணாநிதி 'மத்திய சர்க்கார் மின் கட்டணத்தை அதிகமாக்க வேண்டும்' என்று கூறியுள்ளதாக மத்திய அரசின்மீது குற்றஞ்சாட்டுகிறார்; 'அந்த யோசனையை ஏற்க முடியாது' என்று மறுக்கும் தைரியம் அவருக்கு இருக்கிறதா?

...'தி. மு. க. அரசு, ரௌடிகளைத் தூண்டிவிடும் பாசிச அரசு..."

மேலே கண்ட வாசகங்கள் ('தினமணி' இதழில் வெளிவந்தவை) அனைத்தும் காமராசர் பேச்சிலிருந்து உதிர்ந்த மணிகள்!

'இதுநாள்வரை மௌனமாக இருந்துவந்த காமராசர் பேசப் போகிறாரே -- என்ன பேசுகிறார் பார்க்கலாம்' என்று எதிர்பார்த்திருந்தவர்களுக்கு, 'நான் அசல் காமராசரேதான்' என்று நிரூபித்திருக்கிறார்; இதைத் தவிர வேறு என்ன அவரிடம் மாற்றம் காணமுடியும்? 'மனிதன் -- மாறியிருப்பார்' என்று எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றம்தான் மிச்சம்!

'விவசாயிகள் கிளர்ச்சி' என்ற பெயரால் நடத்திய திருவிளையாடல்களுக்கெல்லாம் பக்கபலமாக இருந்த காமராசரும் -- கக்கனும் பின்னர் எப்படிப் பேசுவார்கள்?

இதுவரையில், 'விவசாயிகள்' என்ற பெயரால் நடந்த ரௌடித்தனமெல்லாம் சாதாரணமானவையாம்; அதைவிடப் பெரிய ரௌடித்தனத்தைத் தலைமைவகித்து நடத்தப்போகிறாராம் காமராசர்!

தமிழ்நாட்டு மக்கள் மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும்; காமராசர் பரோக்ஷமாக இருந்து நடத்திய திருவிளையாடலே இந்த அளவுக்குச் சென்றிருக்கிறது என்றால், அவரே தலைமை வகித்து நடத்தும் திருக்கூத்து எப்படியிருக்கும்?

காமராசர் தலைமைவகித்து நடத்திய மௌன ஊர்வலமே குண்டர்களின் படையாக மாறி தாக்குதல்களை நடத்தியிருக்கிறது என்றால், உள்ளபடியே நேரடியாகக் காமராசர் திருக்கூட்டம் கிளர்ச்சி இயக்கம் நடத்தினால், அது எதில்போய் முடியும் என்பதைத் தமிழ் மக்கள் யூகித்துக்கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

ஆனால் ஒன்று; தமிழகத்தில் இருக்கின்ற கழக அரசு -- கலைஞர் தலைமையில் உள்ள அரசு -- பேரறிஞர் அண்ணா அவர்கள் வழிவந்த அரசாகும்; 'வன்செயலை வன்செயலாலதான் சந்திக்க வேண்டும்' என்ற கொள்கைக்கு மாறானது -- அண்ணா கோட்பாடு; இந்த அரசுக்கு எவ்வளவு தொல்லை கொடுத்தாலும், அது பொறுமை இழந்துவிடாது; அதே நேரத்தில் சட்டம்—ஒழுங்கை நிலைநாட்டத் தமிழக அரசு சிறிதும் தவறாது -- பொது மக்களுக்கும் சேதம் ஏற்படுத்த அனுமதியாது என்பதை மட்டும் காமராசர் திருக்கூட்டம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

காமராசர் இப்படிப் பேசியதன் மூலம், கழக அரசை அச்சுறுத்திவிட்டதாக மனப்பால் குடித்துக்கொண்டிருக்கிறார்; அதே நேரத்தில் அவருடைய 'யோக்கியதை' என்ன என்பதைத் தமிழ் மக்கள் நன்கு புரிந்துகொண்டுவிட்டார்கள் என்பதையும் அவர் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இப்படிப்பட்ட அச்சுறுத்தலுக்கெல்லாம் அஞ்சக்கூடியது அல்ல -- கழகமும் கழக அரசும்! காமராசர் திருக்கூட்டத்தின ஒவ்வொரு நடவடிக்கையையும் தமிழக மக்கள் கூர்ந்து கவனித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளது கழகம்; இந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் எதிர்க் கட்சியாக இருந்தபோதும் அது இயங்கியது; அதன் படிதான் ஆளுங்கட்சியாகவும் மாறியது.

தீர்ப்புச் சொல்ல வேண்டிய மக்கள் மன்றம், கடந்த இரண்டு தேர்தல்களிலும் கழகத்தை வைக்கவேண்டிய இடத்தில் வைத்து -- மாற்றுக் கட்சியினரைப் புறக்கணிக்க வேண்டிய அளவுக்குப் புறக்கணித்தது; இன்னமும் பழைய பாணியிலேயே காமராசரும் -- அவரது திருக்கூட்டத்தாரும் நடந்துகொள்வதால் கழகத்துக்கோ -- கழக அரசுக்கோ நட்டம் ஏதும் ஏற்பட்டுவிடப் போவதில்லை; காமராசரும் -- அவரைச் சூழ்ந்துள்ள திருக்கூட்டமும் இதனை உணர்ந்து திருந்திக்கொள்ள வேண்டும்.

# போர் குற்றவாளிகள் தப்ப முடியாது

## விசாரணைக்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன

### அனைத்து நாட்டுச் சட்டப்படி வங்க தேசம் நடவடிக்கை

டாக்கா, ஜூலை 11—

பாகிஸ்தான் போர்க் கைதிகளை விசாரணை செய்வதற்கு, அனைத்து நாட்டுப் போர்க் குற்றவாளிகள் விசாரணைக் கோட்பாடுகளின் அடிப்படையில் வங்காள தேசம் விரைவில் சட்டங்களை இயற்றும்.

ஒரு தனி டிரிபியூனலை அமைத்துக் குடியரசுத் தலைவர் ஆணை பிறப்பிப்பார்; இந்த டிரிபியூனலில் சில அனைத்து நாட்டுச் சட்ட நிபுணர்கள் இடம் பெறுவார்கள்.

சில உயர் இராணுவ ஜெனரல்கள் உட்பட 1,500 பேர்மீது விசாரணை நடைபெறும்.

இவர்களில் ஏராளமானவர்கள் மீது ஏற்கனவே திட்டவட்டமான குற்றச்சாட்டுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

சில வெளிநாடுகள் எவ்வளவோ நிர்ப்பந்தங்கள் கொண்டுவந்தும், விசாரணை நடத்துவதில் வங்காள தேசம் உறுதியாக இருக்கிறது.

# கருச் சிதைவுக்கு அனுமதியளிக்கப் புதிய சட்டம்

## 'சமூகத்தின் பரந்த நலனுக்குத் துணை செய்யும்' என நம்பிக்கை

### தமிழ்நாட்டில் மேலும் 20 மருத்துவமனைகளில் கருச் சிதைவுக்கு வசதி -- கருத்தரங்கில் அமைச்சர் க. அன்பழகன் தகவல்

சென்னை, ஜூலை 10—

**தமிழ்நாட்டில் மேலும் 20 அரசாங்கத் தலைமை மருத்துவமனைகளில் சட்டபூர்வமான கருச் சிதைப்புக்கு வசதி செய்து தரப்படும்; இத்துடன் சேர்த்து மொத்தம் 50 மருத்துவமனையில் இந்த வசதி இருக்கும்.**

கருச் சிதைவுச் சட்டம்பற்றிய கருத்தரங்கு ஒன்றை மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் க. அன்பழகன் அவர்கள் தொடங்கி வைத்துப் பேசுகையில் இத்தகவலை வெளியிட்டார்.

உரிய மருத்துவக் காரணங்களுக்காகக் கருச் சிதைவு செய்து கொள்வதை அனுமதிக்கும் சட்டம் இந்த ஆண்டு ஏப்ரலிலிருந்து செயலுக்கு வந்திருக்கிறது; இந்தச் சட்டத்தின் நடைமுறைக் குறித்து விவாதிப்பதற்காக இந்திய மக்கள் வளக் கட்டுப்பாட்டுக் குழு -- தமிழ்நாடு அரசாங்க இந்திய மருத்துவச் சங்கம் -- ஆந்திர மகிளா சபா மருத்துவ நிலையம் ஆகியவை ஒன்று சேர்ந்து இக்கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்தது.

பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் பேசுகையில் கூறியதாவது :—

"நாட்டில் பெண்களின் எதிர்காலம் சம்பந்தமாக அண்மைக் காலத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள மிக முற்போக்கான சட்டங்களுள் இந்தச் சட்டமும் ஒன்றாகும்; இந்தச் சட்டத்தினால் தார்மீகச் சீரழிவு ஏற்படாது; அதற்கு மாறாக, சமூகத்தின் பரந்த நலனுக்கு இது துணை புரியும்.

"அடுத்த ஐந்தாண்டுக் காலத்தில் ஒவ்வொரு தாலுகாவிலும் இரண்டு மருத்துவமனைகளில் கருச் சிதைப்பு வசதி செய்து தர அரசு எண்ணியிருக்கிறது.

"தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் சுமார் 14 இலட்சம் குழந்தைகள் வீதம் பிறக்கின்றன; ஆண்டுக்கு ஓர் இலட்சம் கருச் சிதைவு என்ற இலக்குக் கைகூட வேண்டுமெனில், தமிழ்நாட்டில் 200-முதல் 300 வரை இத்தகைய மருத்துவமனைகள் தேவைப்படும்."

எழும்பூர் மகப்பேறு மருத்துவமனையில் மகப்பேறு ஆராய்ச்சிக் கழகத்தின் இயக்குநராகப் பணியாற்றியவரும் -- உலக சுகாதார நிறுவனத்தில் மகப்பேறு -- குழந்தை நலம் பற்றிய நிபுணர் குழு உறுப்பினருமான டாக்டர் எம். கே. கிருஷ்ணமேனன் முக்கிய சிறப்புரை நிகழ்த்தினார்; அப்போது அவர் வெளியிட்டுள்ள கருத்துக்களாவன :—

"நாட்டில் சாதாரணமாக ஓராண்டில் 65 இலட்சம் கருச் சிதைவுகள் நேரிடுகின்றன; இதில் சுமார் 26 இலட்சம் கருச் சிதைவுகள் தாமாக நேரிடுபவை; 39 இலட்சம் செயற்கையான கருச்சிதைப்புகள் ஆகும்; இதனால் எவ்வளவு உயிர்ச்சேதம் விளைகின்றன என்பதைக் கண்டறிய முடியவில்லை; இருப்பினும், மகப்பேறு காரணங்களால் 15 முதல் 20 சதவிகிதம் வரை உயிர்ச் சேதங்கள் கருச்சிதைவால் ஏற்படுபவை எனலாம்; இதில் 98 சதவிகிதம் -- கருச் சிதைப்பின்போது சுகாதாரக் குறைவால் ஏற்படுபவை.

சாதாரணமாக 12 வாரக் கரு முதிர்ச்சிக்குப் பிறகு கருச் சிதைவு ஏற்பட்டால், தாய்மார்களிடை உயிர்ச்சேத அபாயம் ஐந்து மடங்காகிறது; ஆனால் 20 வாரங்கள் வரை கருச் சிதைவு செய்துகொள்ளுவதை இந்தச் சட்டம் அனுமதிக்கிறது; இதில் ஒரு ஆறுதலான அம்சம் என்னவென்றால், '12 வாரங்களுக்கு மேற்பட்ட கருச் சிதைப்புகள் 2 டாக்டர்களைக் கொண்டு செய்ய வேண்டும்' என்று சட்டத்தில் நிபந்தனை இருப்பதுதான்.

துவக்கக் கட்டத்திலேயே கருச் சிதைப்புச் செய்துகொள்ளுவதால், 'அவுட் பேஷண்டு' ஆக (அதாவது மருத்துவமனையில் தங்கியிராமல்) செய்துகொள்ளலாமென்ற கருத்து ஏற்கத்தக்கதல்ல; ஏனெனில், நம் நாட்டில் பெரும்பாலோர் ஊட்டச் சத்துக் குறைவால் பீடிக்கப்பட்டிருப்பவர்கள்; எனவே, கருச்சிதைப்புக்குப்பின் குறைந்தபட்சம் இரண்டு நாட்களாவது மருத்துவமனையில் தங்கியிருக்க வேண்டும் என்று நிபந்தனை இருக்கவேண்டும்."

# நிர்வாகத்தில் ஆர்.எஸ்.எஸ். சக்திகள்

## ஒழிக்கும் முயற்சியில் தீவிரம்

### ம. பி. முதல்வர் அறிவிப்பு

போபால், ஜூலை 10—

"மாநில நிர்வாகத்தில் உள்ள ஆர்.எஸ்.எஸ் சக்திகளை ஒழிக்கும் முயற்சியில் ஈடுபடுவேன்" என்று, மத்தியப் பிரதேச முதல்வர் பி. சி. சேத்தி அறிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"ஆர்.எஸ்.எஸ். சக்திகள் அரசு வேலையிலிருந்து நீக்கப்படுவதுடன் மட்டுமன்றி, வேறு இடங்களில் அவர்கள் வேலைக்கு அமரும் தகுதியும் பறிக்கப்படும்.

"ஆர்.எஸ்.எஸ்., ஜமாத் இ--இஸ்லாமி போன்ற வகுப்புவாத நிறுவனங்களுக்குத் தடைவிதிப்பது பற்றி இதர மாநில முதல்வர்கள் —மத்திய சட்ட அமைச்சர், உள்துறை அமைச்சர் ஆகியோருடன் ஆலோசனை செய்து வருகிறேன்."

## 438 வேலைவாய்ப்பு நிலையங்கள் இந்தியாவில் இருக்கின்றனவாம்

புதுடில்லி, ஜூலை 10—

இந்தியாவில் தற்போது 498 வேலை வாய்ப்பு நிலையங்கள் இருக்கின்றன.

இவற்றில் 51 பல்கலைக் கழகங்களில் உள்ளன; இவை வேலை வாய்ப்பு பற்றிய தகவல்களையும் கூறி உதவும்.

15 உத்தியோக ரீதியிலான வேலை வாய்ப்பு நிலையங்கள் ஆகும்.

திட்டங்களைச் செயல்படுத்தும் இடங்களில் 10-ஆம், ஊனமுள்ளவர்களுக்கெனத் தனி நிலையங்கள் 11-ஆம், தோட்டப் பயிர்த் தொழிலுக்கென ஒன்றும் இருக்கின்றன.

மேலும், நாட்டின் பல்வேறு சமுதாய நல முன்னேற்றத் தொகுதிகளில் 199 வேலை வாய்ப்பு தகவல் உதவி நிலையங்கள் உள்ளன; இவை, கிராமப்புற மக்களுக்கு வேலை கிடைக்க வழிவகை செய்கின்றன.

# கண் சிகிச்சை முகாம்கள்

## அமைச்சர் க. அன்பழகன் வேண்டுகோள்

சிதம்பரம், ஜூலை 10—

சிதம்பரம் அரிமா சங்கத்தின் உதவியுடன் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொறியியல் கல்லூரியில், 'கலைஞர் கருணாநிதி இலவசக் கண் சிகிச்சை முகாம்' இருவாரம் நடந்தது.

4 378 பேர் இந்த கண் கிகிச்சை முகாமில் சிகிச்சை பெற்றனர்; 433 பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

முகாம் நிறைவு நாள் விழாவில், அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது.

இவ்விழாவிற்கு சென்னை கண் மருத்துவமனைத் தலைமை டாக்டர் ஜே. இ. ஆபிரகாம் தலைமைதாங்கினார்.

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் க. அன்பழகன் அவர்கள், இலவச மூக்குக் கண்ணாடிகளை வழங்கிப் பேசுகையில் கூறியதாவது :—

"தமிழகத்தில் ஏறத்தாழ 6 இலட்சம் மக்கள் விழிகளில் பார்வையிழந்து அவதியுறுகிறார்கள்; இந்த ஏழை எளியவர்களின் கண்களில் ஒளி தந்திடும் பணியினை -- ஏழைகளின் அரசாகிய தமிழக அரசு--கலைஞரின் பிறந்த நாளில் ஏற்றுள்ளது.

இந்த ஆண்டில் ஓர் இலட்சம் பேருக்குக் கண் அறுவைச் சிகிச்சை அளிக்கத் தமிழகத்தின் பல இடங்களில் கண் சிகிச்சை முகாம்கள் நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

தென் ஆற்காடு மாவட்டத்தில் மட்டும் இவ்வாண்டு 10,000 பேர்களுக்குக் கண் அறுவைச் சிகிச்சை அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கடுத்த கண் சிகிச்சை

(4-ம் பக்கம் பார்க்க)

# 'விட்டுத்தரும் மனப்பான்மை தேவை-எனினும் வரையறை அவசியமாகும்'

## 'சமுதாய அமைப்பில் இரு வேறு துறைகளுக்கிடையே பாலமாக அமைந்திருப்பது கூட்டுறவுத் துறைதான்'

### முதலமைச்சர் கலைஞர் தெளிவுரை

சென்னை, ஜூலை 10—

"கூட்டுறவுத் துறை யார் யாருக்குப் பயன்படவேண்டும் -- எந்த ஏழை நடுத்தர மக்களுக்குப் பயன்படவேண்டும் என்று அறிஞர் அண்ணா அவர்கள் கருதினார்களோ அந்தக் கருத்து வெற்றியடையும் வகையில், கூட்டுறவுத் துறையும் -- அரசும் நடந்துகொள்வதுதான் அண்ணா அவர்களுக்கு நாம் காட்டும் நன்றிக் கடனாகும்.

"கூட்டுறவுத் துறை என்பது, தனியார் துறைக்கும் -- பொதுத் துறைக்கும் இடையே அமைந்துள்ள பாலமாகும்.

"பொதுத் துறை உடனடியாக எல்லாத் துறையிலும் அமைத்துவிடக்கூடிய ஒன்றல்ல; அதேபோல், இன்றையச் சமுதாய அமைப்பில் தனியார் துறை உடனடியாக அகற்றிவிடக்கூடிய ஒன்றல்ல; ஆனால், இந்த இரண்டுக்கும் இடையில் நாம் விரும்புகின்ற மாற்றங்களை நாட்டில் செய்கின்ற துறை -- இரண்டு துறைகளுக்கும் பாலமாக இருக்கக்கூடிய துறை -- கூட்டுறவுத் துறையாகும்.

"விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை நிலவவேண்டிய துறை -- கூட்டுறவுத் துறையாகும்; இதைச் சொல்வதால் தவறுகளை விட்டுக் கொடுத்திடவேண்டும் என்று நான் கூறவில்லை; எதையெதை விட்டுக் கொடுக்கலாம் என்று வரையறுத்து நாம் செயல்பட வேண்டும்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விழா ஒன்றில் சுட்டிக் காட்டி வலியுறுத்தினார்.

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில், பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவம் படத் திறப்பு விழாவும், மாவட்ட--வட்டக் கூட்டுறவு ஒன்றியங்களின் கருத்தரங்கு நிறைவு விழாவும் ஜூலை 8-ம் நாள் நடைபெற்றன.

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கப் பெருந்தலைவர் பி. நடேசன் அனைவரையும் வரவேற்றார்.

விழாவிற்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் சி. பா. ஆதித்தனார் தலைமை தாங்கினார்.

அமைச்சர்கள் க. இராசாராம், செ. மாதவன் ஆகியோர் பேசினர்.

முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்கு வாழ்த்திதழ்கள் படித்தளிக்கப்பட்டன.

# 3 மாதங்களில் 389 விழாவா?

## இந்திரா கட்சி முதல்வரின் பாராட்டு விழா மோகம்

### மைசூர் மேலவையில் எதிர்க் கட்சித் தலைவர் கண்டனம்

"கருநாடக மாநிலத்தில் பதவிக்கு வந்துள்ள இந்திரா காங்கிரசு முதலமைச்சர் தேவராஜ் அர்சுக்கும் -- மற்றும் அவரது அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களுக்குமாக சென்ற 3 மாதத்தில் 389 பாராட்டு விழாக்கள் நடத்தப்பட்டுள்ளன.

"இந்தப் பாராட்டு விழாக்களுக்குச் செலவான தொகை ரூ. 4 இலட்சம்; இந்த விழாக்கள் சிலவற்றில் 9 அமைச்சர்கள்கூடக் கலந்து கொண்டிருக்கிறார்கள்"

என்று மைசூர் மேலவையில் சிண்டிகேட் காங்கிரசுத் தலைவர் இராமகிருஷ்ண ஹெக்டே கூறினார்.

# 12 ஆண்டுகளில் தனி நபர் வருமானம் இரட்டிப்பாகும்

## கல்வி --- சுகாதார வசதிகள் --- வேளாண்மை --- வேலை வாய்ப்புக்கள் பெருகும்

### ரூ. 9,347 கோடி முதலீட்டில் தொலைநோக்குத் திட்டம் --- தமிழகத் திட்டக் குழு உருவாக்கியுள்ள வரைவு

சென்னை, ஜூலை 11—

"தமிழ்நாட்டில் 1983-84-ல் சராசரி நபர் வருமானம் ரூ. 778. ஆக (1960 61-ம் ஆண்டு விலைவாசிகளின் அடிப்படையில்) உயர்த்திடும் வகையில், கூட்டு வளர்ச்சி விகிதம் ஆண்டுக்கு 7 60 சதவிகிதமாக இருக்க வேண்டும்" என்று, மாநிலத் திட்டக் குழு உருவாக்கியுள்ள தொலைநோக்குத் திட்ட வரைவில் வரையறுக்கப்பட்டுள்ளது.

தொலைநோக்குத் திட்ட வரைவு அண்மையில் திட்டக் குழுவால் மாநில அரசிடம் அளிக்கப்பட்டிருக்கிறது; பொதுமக்களின் கருத்துக்கள் -- யோசனைகள் ஆகியவற்றை அறிந்துகொள்வதற்காகத் திட்ட வரைவு சுற்றுக்கு விடப்படும்.

"அடுத்த 12 ஆண்டுகளில் சராசரி நபர் வருமானம் இரு மடங்கு மடங்காக ஆகவேண்டும்" என்பதே திட்ட வரைவின் நோக்கமாகும்.

இந்த இலக்கை அடைய தற்போது ரூ. 1,645.12 கோடியாக உள்ள மாநில வருவாயை ரூ 4,144.41 கோடியாக உயர்த்த வேண்டும்.

இதற்கு, 1970--71-ம் ஆண்டு விலைவாசிகளின் அடிப்படையில் ரூ. 9,347 கோடி முதலீடு செய்ய வேண்டியிருக்கும்; இந்த முதலீட்டுத் தொகையில் மாநில அரசின் பங்கும், மத்திய அரசின் பங்கும் அடங்கும்.

"ஐந்தாவது—ஆறாவது ஐந்தாண்டுத் திட்டங்களுக்கான தனது முதலீட்டை இரு மடங்காக உயர்த்துவதற்கு வேண்டிய நிதி வசதிகளைத் திரட்டுவது மாநில அரசுக்குக் கடுமையான சோதனையாக இருக்கும்" என்பதைத் தொலைநோக்குத் திட்ட வரைவு ஒப்புக்கொள்கிறது

"கூடுதல் நிதி வசதிகளைத் திரட்டுவதிலும் -- திட்டச் சார்பில்லாச் செலவுகளில் சிக்கனம் செய்வதிலும் -- மாநில அரசு முன்பு எப்போதும் செய்திராத முயற்சிகளைச் செய்யவேண்டியிருக்கும்" என்று அது கூறுகிறது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குக் கிடைப்பதைவிட, ஐந்தாவது -- ஆறாவது திட்டங்களுக்கு மத்திய அரசின் பங்காக கூடுதல் நிதி வசதிகள் கிடைக்கும்" என்று அது நம்பிக்கை தெரிவித்துள்ளது.

"அகில இந்திய அளவில் சென்ற 20 ஆண்டுகளில் உண்மையான சராசரி நபர் வருமானம் 30.60 சதவிகிதம்தான் அதிகரித்திருக்கிறது; எனவே, அடுத்த 12 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் சராசரி நபர் வருமானத்தை இரு மடங்காக அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்ற இலக்கு, பேரவாவைக் கொண்டதாகத் தோன்றக்கூடும்" என்று தொலைநோக்குத் திட்ட வரைவு கூறுகிறது.

வளர்ச்சி விகிதம் குறைவாக இருந்துவந்திருப்பதால், புதியதொரு திட்ட வழியை அது பின்பற்றியிருக்கிறது: இந்தப் புதிய வழியின்படி, வேலை வாய்ப்பு மத்திய நோக்கமாக இடம்பெறும்; உற்பத்தி, வினியோகப் பணிகளுடன் வேலை வாய்ப்புக்கு வகை செய்யும் பணி இணைக்கப்படும்.

"இந்தப் புதிய வழியைப் பின்பற்றிப் பல நாடுகள் தங்களது சராசரி நபர் வருமானத்தைப் பெருக்குவதில் வெற்றி கண்டிருக்கின்றன" என்று தொலைநோக்குத் திட்ட வரைவு கூறுகிறது.

"தமிழ்நாட்டில் ஐந்தாவது திட்டத் துவக்கத்தில் 16.50 இலட்சம் பேர்களும், 6-வது திட்டத் துவக்கத்தில் 19 இலட்சம் பேர்களும் வேலையற்றவர்களாக இருப்பார்கள்" என்று தொலைநோக்குத் திட்ட வரைவு மதிப்பீடு செய்துள்ளது.

அடுத்த 12 ஆண்டுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் முற்றிலும் அகன்றிட -- வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை வேலையில்லாதவர்களின் எண்ணிக்கையைவிட அதிகமாக அமையவேண்டும்; எனவே வேளாண்மை -- கால்நடை -- மீன்வளம் -- சிறு தொழில்கள் ஆகிய துறைகளில் முதலீட்டுத் தேவை குறைவாகவும், வேலை செய்வோரின் எண்ணிக்கை அதிகமாகவும் உள்ள தொழில்கள் ஏற்படும் வகையில் முதலீட்டு முறை ஒன்றை தொலைநோக்குத் திட்ட வரைவு தெரிந்தெடுத்திருக்கிறது.

உயர் விளைச்சல் ரக தானியங்கள் சாகுபடி செய்யப்படும் நிலப் பரப்பின் அளவை அதிகப்படுத்துவது -- பயறு வகைகள், தாவர எண்ணெய், பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகப்படுத்துவது ஆகியவை தொலைநோக்குத் திட்ட வரைவிலுள்ள குறிக்கோள்களாகும்.

சென்னை நீங்கலாக எல்லா மாவட்டங்களிலும் 'தீவிரவேளாண்மைத் திட்டம்' விரிவுபடுத்தப்படும்.

தீவிர பருத்தி வளர்ச்சித் திட்டம் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்படும்.

கரும்பு, எண்ணெய் வித்துக்கள் சாகுபடியைத் தீவிரமாக மேம்பாடு செய்யத் திட்டமிட்டிருக்கிறது.

மேம்பாடு செய்யப்பட்ட விதைகள்—தரமான உரங்கள்—பயிர்ப் பாதுகாப்புக்கான மருந்துகள் ஆகியவற்றை சப்ளை செய்வதற்கும் ஆராய்ச்சிகளைத் தீவிரப்படுத்துவதற்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

பெரிய — நடுத்தரத் தொழில்களில் ரூ. 1,370 கோடியும், சிறு கிராமத் தொழில்களில் ரூ. 230 கோடியும் முதலீடு செய்யவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

பெரிய-நடுத்தரத் தொழில்களில் உத்தேசிக்கப்பட்டுள்ள முக்கியமான திட்டங்கள் வருமாறு :—

சேலம் உருக்காலை -- ஓர் அம்மோனியம் குளோரைடு ஆலை -- ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் -- ஒரு சோடா ஆஷ் ஆலை -- தூத்துக்குடியில் பெட்ரோ கெமிகல் நிறுவனம் -- டயர் தயாரிப்பு ஆலை -- சேலம் உருக்காலையை ஒட்டிய துணைத் தொழில்கள் -- மணலி பெட்ரோ கெமிகல் நிறுவனத்தை ஒட்டிய துணைத் தொழில்கள்.

இவை தவிர, சிமெண்டு -- காகிதம் -- அலுமினியம் -- ஆட்டோ உறுப்புக்கள் -- சர்க்கரை -- சிந்தடிக் நூலிழை ஆகியவற்றைத் தயாரிப்பதற்கான தொழில்களைத் தொடங்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

"தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமாகக் கனி வளங்கள் மேம்பாட்டுக் கார்ப்பரேஷன் ஒன்றை உடனடியாக அமைக்கவேண்டும்" என்று தொலைநோக்குத் திட்ட வரைவில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

"இந்தக் கார்ப்பரேஷனை அமைப்பதற்காக ரூ. 32 கோடி முதலீடு செய்யலாம்" என்று யோசனை கூறப்பட்டிருக்கிறது.

"ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில், தமிழ்நாட்டில் 1,97,390 இலட்சம் யூனிட் மின்சாரம் பற்றாக்குறையாக இருக்கும்" என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பற்றாக்குறையைச் சமாளிக்கப் பின்வரும் திட்டங்களை நடைமுறைப்படுத்தலாம் என்று யோசனை கூறப்பட்டிருக்கிறது :—

1. கல்பாக்கம் அணு விசைத் திட்டத்தைச் செயல்படுத்துவது.
2. புதிய நீர்ப்பாசனத் திட்டங்களைத் தொடங்குவது.
3. தூத்துக்குடியில் 600 மெகாவாட் சக்தி கொண்டதாக அனல் மின்சார நிலையத்தைத் தொடங்குவது தமிழ்நாட்டில் வேறு ஏதாவது ஒரு இடத்தில் 400 மெகாவாட் சக்தி கொண்ட ஒரு புதிய அனல் மின்சார நிலயத்தை அமைப்பது.
4. நெய்வேலி அனல் மின்சார நிலையத்தின் தயாரிப்புச் சக்தியை அதிகப்படுத்துவது.
5. மதுரைக்குத் தெற்கில் 1,000 மெகாவாட் தயாரிப்புச் சக்தி கொண்ட இரண்டாவது அணு விசைத் திட்டம் ஒன்றைத் துவக்குவது.

"இந்தத் திட்டங்களைச் செயல்படுத்தினாலும் சுமார் 1877 மெகாவாட் மின்சாரம் பற்றாக்குறை இருக்கும்" என்று தொலைநோக்குத் திட்ட வரைவு கூறுகிறது

"தமிழ்நாட்டில் 6-வயது முதல் 15 வயது வரையிலுள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் முழுக் கல்விக்கு வகை செய்வது, கல்வி முறையின் முக்கிய நோக்கமாக இருக்கும்" என்று திட்ட வரைவு கூறுகிறது.

கல்வி பயிலுவதற்கான உரிமையை வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான உரிமையுடன் நேரடியாக இணைப்பது மற்றொரு முக்கிய நோக்கமாக இருக்கும்; இந்த நோக்கங்களை அடைய கீழ்க்காணும் திட்டம், திட்ட வரைவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது :—

1. பள்ளிப் படிப்பு 10 ஆண்டுகளாக ஆக்கப்படும்; அவ்வப்போது வேலையில் சேரவோ அல்லது வீட்டில் பணிபுரியவும்-- பள்ளிக்கூடத்திலிருந்து மாணவர்கள் வெளியேறவும் -- பின்னர் மீண்டும் பள்ளிக்கூடத்தில் படிப்பைத் தொடரவும் -- இந்த 10 ஆண்டுப் படிப்பும் பல்வேறு கட்டங்களாகப் பிரிக்கப்படும்.
2. ஐந்தாவது வகுப்புக்கு முன்பாகப் பள்ளியிலிருந்து வெளியேறுகின்ற அனைவருக்கும், பள்ளிக்கு அப்பாற்பட்ட கல்வி வசதி அளிக்கப்படும்.
3. பள்ளிப் பாடத் திட்டங்களும், பயிற்று முறைகளும், சமூக -- பொருளாதார -- கலாச்சார மெய்ப்பாடுகளுக்கு ஏற்றவகையில் அமைவதற்கு அவற்றைத் திருத்தி அமைப்பது -- இடைநிலைக் கல்வியைத் தொழிற் பயிற்சிக்கு இடமளிக்கக்கூடியதாக ஆக்குவது.
4. இரண்டு ஆண்டு இண்டர் மீடியட் படிப்பு -- 2 அல்லது 3 ஆண்டுப் பட்டப் படிப்பு -- 2 ஆண்டு பட்ட மேற்படிப்பு ஆகியவற்றைக் கொண்டதாக உயர் கல்விக்கு ஏற்பாடு செய்வது.

"சத்துக் குறைவு -- நோய்கள் -- முதலியவற்றைப் படிப்படியாகக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்" என்றும் தொலைநோக்குத் திட்ட விரைவு கூறி இருக்கிறது.

6 வயது முதல் 15 வயது வரையில் உள்ள குழந்தைகளுக்கு, (குறைந்தபட்சம் 2200 கலோரி) சத்துணவு வழங்க வகை செய்யப்படும்.

சுகாதார வசதி -- குடியிருப்பு வசதி -- பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆகியவற்றுக்கும் வகை செய்யப்படும்.

"குடிவார உரிமைகள் -- நிலமற்ற தொழிலாளர்களுக்கு நில வினியோகம் -- நில உச்சவரம்புச் சட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்துவது -- நிலம் உள்ள இடங்களில் இல்லாமல் பிற இடங்களில் இருந்துகொண்டு நிலங்களுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கும் முறையைப் படிப்படியாக ஒழிப்பது ஆகியவற்றுக்குச் சட்டங்களை நிறைவேற்றலாம்" என்று யோசனை கூறப்பட்டிருக்கிறது.

சிறு விவசாயிக்கு -- வாழ்வதற்கு ஏற்ற வருவாயும், விவசாயத் தொழிலாளர்களுக்கு வாழ்க்கையின் குறைந்தபட்ச தேவைகளுக்கு ஏற்ப ஊதியங்களும் கிடைக்கச் செய்யவேண்டும்.

"விவசாயத் தொழிலாளர்களுக்கும் -- சிறு விவசாயிகளுக்கும் 'முதியோர் பென்ஷன்' திட்டம் உள்படப் பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைக எடுக்கவேண்டும்" என்று தொலைநோக்குத் திட்ட வரைவு யோசனை கூறியிருக்கிறது.

"உள்ளாட்சி அமைப்புக்களைத் திருத்தியமைப்பதன் மூலம், மாவட்டம் போன்ற சிறிய பகுதிகளின் மேம்பாட்டுக்குத் திட்டமிடுவதைத் தொடக்கமாகக் கொள்ளலாம்" என்று யோசனை கூறப்பட்டிருக்கிறது.

"இவ்வாறு எடுத்துக்கொள்ளப்படும் சிறிய பகுதிகளில், துவக்க -- இடைநிலைக் கல்வி, சாலை மேம்பாடு, குடிநீர் வினியோகம் ஆகியவற்றைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பை, திருத்தியமைக்கப்படுகின்ற உள்ளாட்சி அமைப்புக்களிடம் விடலாம்; உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்றவாறு வரிகளையும் -- தீர்வைகளையும் விதிக்க அந்த அமைப்புக்களுக்கு அனுமதி தரலாம்; நிதி வசதிகளைத் திரட்டுவதற்கான மற்ற வாய்ப்புக்களையும் அந்த அமைப்புக்களுக்கு ஏற்படுத்தித் தரலாம்" என்றும் தொலைநோக்குத் திட்டத்தில் யோசனை கூறப்பட்டிருக்கிறது.

# எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை

## இந்தியாவில் தமிழ் நாட்டுக்கு இரண்டாவது இடம்

புதுடில்லி, ஜூலை 10—

கடந்த பத்தாண்டுகளில இந்தியாவில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை 24.03 சதவிகிதத்திலிருந்து 29.34 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது.

இந்தியாவிலேயே கேரள மாநிலத்தில்தான் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை அதிகம்; அங்கு 60.16 சதவிகிதம் பேருக்கு எழுதப் படிக்கத் தெரியும்; தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெறுகிறது.

மத்திய நிர்வாகப் பகுதிகளில் எழுத்தறிந்தோர் அதிகமாக வாழுமிடம் சண்டிகர் -- டில்லி -- கோவா -- டாமன் -- டையு ஆகியவை அடுத்த இடங்களைப் பெறுகின்றன.

1961—ஆம் ஆண்டில் இந்தியாவில் நூற்றுக்கு 12.95 சதவிகிதம் பெண்களுக்கு மட்டுமே எழுதப் படிக்கத்தெரியும்; 1971-ல் இது 18.44 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது.

இந்தப் பத்தாண்டுகளில் எழுதப் படிக்கத் தெரிந்த ஆண்களின் எண்ணிக்கை 34.45 சதவிகிதத்திலிருந்து 39.51 சதவிகிதமாக அதிகரித்துள்ளது.

# ஜூலை 15: 'வன்முறை கண்டன நாள்'

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

**மதுரை**
அமைச்சர் செ. மாதவன்
மேயர் எஸ். முத்து எம்.எல்.சி.
வி. எம். யூசுப் சாகிப்
ஏ. ஆர். பெருமாள் எம்.எல்.ஏ.
நீர்காத்தலிங்கம்

**தென்காசி**
அமைச்சர் சாதிக் பாட்சா
சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம்
திருச்சி எம். எஸ். மணி
கா. மு. கதிரவன்

**மன்னார்குடி**
அமைச்சர் ப. நாராயணசாமி
எஸ். டி. சோமசுந்தரம் எம்.பி.
கு. பாலகிருஷ்ணன் எம்.எல்.ஏ.
சு. நாராயணசாமி

**திண்டிவனம்**
அமைச்சர் சி. பா. ஆதித்தனார்
ஜி. இராசாராம் எம்.எல்.ஏ.
டி. கே. குமாரசாமி

**உடுமலைப்பேட்டை**
அமைச்சர் க. இராசாராம்

**பொள்ளாச்சி**
ஏ. பி. சண்முகசுந்தரம்
ஏ. எஸ். மணி எம்.எல்.ஏ.

**நாமக்கல்**
அமைச்சர் எஸ். இராமச்சந்திரன்
மு. பழனிவேலன் எம்.எல்.ஏ.

**நாகர்கோவில்**
அமைச்சர் மு. கண்ணப்பன்
எஸ். முகம்மதுகான்
எம். சி. பாலன் எம்.பி.
இராசாப்பிள்ளை எம்.எல்.ஏ.
ஏ. திரவியம்

**சேலம்**
நாஞ்சில் கி. மனோகரன் எம்.பி.
ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.பி.
ஏ. அமனுல்லாகான்
ஏ. ஜெயராமன் எம்.எல்.ஏ.

**திருப்பூர்**
செ. கந்தப்பன் எம்.எல்.ஏ.

**அவினாசி**
கோ. சி. மணி எம்.எல்.சி.
சு. துரைசாமி எம்.எல்.ஏ.

**காஞ்சிபுரம்**
இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ.
முரசொலி மாறன் எம்.பி.
திருத்தணி தியாகராசன்
கே. டி. எஸ். மணி எம்.எல்.ஏ.

**பட்டுக்கோட்டை**
டி. வி. நாராயணசாமி எம்.எல்.சி.
செல்வி தமிழரசி
சக்தி கதிர்வேலு

**கும்பகோணம்**
க. அறிவழகன் எம்.எல்.சி.
கு. இராசமாணிக்கம் எம்.எல்.ஏ.
சு. பத்மநாபன்
எஸ். ஆர். இராதா

**சிவகங்கை**
அறிவுடைநம்பி எம்.எல்.சி.
சக்தி மோகன் எம்.எல்.சி.
எஸ். எஸ். மாரிசாமி எம்.பி.
சேதுராமன் எம்.எல்.ஏ.

**அம்பத்தூர்**
காட்டூர் கோபால் எம்.எல்.சி.
வி. எஸ். கோவிந்தராசன்

**மதுராந்தகம்**
டி. கே. சீனிவாசன் எம்.பி.
என். வி. என். சோமு (சென்னை நகர துணை மேயர்)
கே. நீலமேகம்
வெங்கா எம்.எல்.சி.
கி. ஆறுமுகம் எம்.எல்.ஏ.

**நெல்லை**
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
டி. எம். பீர் முகம்மது
பொ. பத்மனாபன் எம்.எல்.ஏ.
கே. பி. கந்தசாமி எம்.எல்.ஏ.
அழகியநம்பி
தியாக அரசன்

**திருவாரூர்**
மா. முத்துசாமி எம்.பி.
கே. விநாயகம்.
தாழை மு. கருணாநிதி எம்.எல்.ஏ.
கருணை. மு. ஜமால்

**அருப்புக்கோட்டை**
எஸ். எஸ். தென்னரசு எம்.எல்.சி.
திருப்பத்தூர் இராமமூர்த்தி
கடையநல்லூர் திராவிடமணி

**திண்டுக்கல்**
சி. டி. தண்டபாணி எம்.பி.
பொன். சீனிவாசன்
மா. தங்கவேலர்

**பழனி**
மு. இராமநாதன் எம்.எல்.சி.
பி. எஸ். மணியன் எம்.எல்.ஏ.
சி. பழனிசாமி எம்.எல்.ஏ.

**மேட்டுப்பாளையம்**
நன்னிலம் நடராசன்
எம். சி. தூயமணி எம்.எல்.ஏ.
இரசாக்

**தாராபுரம்**
திருமதி பழனியம்மாள் எம்.எல்.ஏ.
பி. ஆர். இலட்சுமிகாந்தன்

**காங்கேயம்**
கே. ஏ. கிருஷ்ணசாமி எம்.பி.

**வெள்ளக்கோவில்**
ஏ. எம். இராசா எம்.எல்.ஏ.

**பவானி**
சி. சிட்டிபாபு எம்.பி.

**பெருந்துறை**
பி. ஏ. சாமிநாதன் எம்.பி.
சுட்டையன், க. அன்பரசு

**நாகை**
அன்பில் தர்மலிங்கம் எம்.எல்.ஏ.
கோவை செழியன் எம்.எல்.ஏ.
கு. இராசமாணிக்கம் எம்.எல்.ஏ.

**செங்கற்பட்டு**
ம. வே. நாராயணசாமி எம்.எல்.ஏ.
ஜே. எம். மியாகான்
செ. கோ. விசுவநாதன்
வ. பசுபதி எம்.எல்.ஏ.
செ. அ. பலராமன்

**கோபி**
ஜி. விசுவநாதன் எம்.பி.

**சத்தியமங்கலம்**
ஆர். பி. உலகநம்பி எம்.பி.
எஸ். கே. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ.

**குடியேற்றம்**
கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ.
துரை முருகன் எம்.எல்.ஏ.
அப்துல் வகாப் எம்.எல்.ஏ.
ஏ. கே. துரைசாமி எம்.எல்.ஏ.
காட்பாடி முனுசாமி

**விழுப்புரம்**
எம். எஸ். அப்துல் காதர் எம்.பி.
எம். சண்முகம் எம்.எல்.ஏ.
சா. கணேசன் (முன்னாள் மேயர்)
சோ. கி. மூர்த்தி எம்.சி.
பக்தவத்சலு

குறிப்பு :—ஆங்காங்குள்ள தோழமைக் கட்சிகளுடன் கலந்துபேசி கூட்டத்தில் சொற்பொழிவாளர்கள் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கழக நிர்வாகிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மற்ற ஊர்களில் கலந்துகொள்வோர் விவரம் அடுத்து அறிவிக்கப்படும்.

# சென்னை மேயர்-- துணை மேயருக்கு

## புதுவை நகராட்சி வரவேற்பு

சென்னை மேயர் காமாட்சி செயராமனுக்கும் -- துணை மேயர் என். வி. என். சோமுவுக்கும், பாண்டிச்சேரி நகராட்சி நேற்று வரவேற்பு அளித்தது.

பாண்டிச்சேரி நகர மேயர் சரசுவதி சுப்பையா, விழாவில் வரவேற்புரை ஆற்றினார்; திருமதி காமாட்சி ஜெயராமனுக்கு அவர் பொன்னாடை போர்த்தினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அறிவகம் அச்சகத்தில் (24, [illegible] சென்னை-10) [illegible]

## இ. காங்கிரசு ஈடுபட்டு நடைபெறும் போராட்டத்திற்கு

# அனைத்திந்திய வானொலியாளர்கள் கைவண்ணம் காட்டுகின்றனரா?

## கழக அரசுமீது காழ்ப்புக் கொட்ட யார் அதிகமாகப் பொய் பேசுவது என்பதில் அவர்களுக்குள்ளேயே போட்டியிடுகின்றனரா?

"வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுகிறார்கள்; அதனை மூடி மறைக்க அவர்களுக்கு ஏடுகள் சில இருக்கின்றன; 'அவைகள் போதாதோ' என்று -அகில இந்திய வானொலியும் தன்னால் இயன்ற 'சத்'காரியத்தைச் செய்துகொண்டிருக்கிறது!

"இந்திரா காங்கிரசு ஈடுபட்டு நடைபெறும் போராட்டத்திற்கு வானொலியாளர்கள் தங்கள் கைவண்ணம் காட்ட வேண்டாமா? நம்மீது காழ்ப்புக் கொட்ட அவர்களுக்குள்ளேயே யார் அதிகமாகப் பொய் சொல்வது என்பதில போட்டி போட்டுக்கொள்கிறார்கள்; அதற்கு ஓர் எடுத்துக்காட்டினைக் கூறுகிறேன்.

"கோவையில், 'துக்க தின'த்திற்கான மௌன ஊர்வலத்தில் நாலாயிரம் பேர் கலந்து கொண்டனர்--என 'தினமணி' ஏடு குறிப்பிட்டிருக்கிறது; ஆனால், அகில இந்திய வானொலியின் சென்னை நிலையத்தினர், கோவை மௌன ஊர்வலத்தில் பத்தாயிரம் பேர் கலந்துகொண்டனர்' என்று முழக்குகிறார்கள்"

**என்ற கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்; 'பெரியார் பாஷை தேவை' என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டிருக்கிறார்.**

## ஒன்பதாண்டுக் காலம் முதல்வராக இருந்தவரின் அர்ச்சனைகளுக்கு நாம் எப்படிப் பதில் தர முடியும்?

**மேலும் கலைஞர் அவர்கள் அக்கட்டுரையில், கடற்கரைக் கூட்டத்தில் காமராசர் சிந்திய முத்துக்களை விளக்கிக் கூறியிருப்பதாவது :—**

ஏமாற்றுக்காரர் -- மோசக்காரர் -- மோசடிக்காரர் -- நாடகம் நடிக்கிறார் -- நடித்தே பழக்கப்பட்டவர் -- நடிப்பதற்கெனவே கதை எழுதுபவர் -- இப்படியெல்லாம் என்னைப் பற்றிய வர்ணனைகளை -- கடற்கரைக் கூட்டத்தில் -- காமராசர் அவர்கள் உதிர்த்திருக்கிறார்; இந்த வர்ணனையில் ஒரு முன்னேற்றம் காண்கிறேன்.

மோசடிக்காரன் -- ஏமாற்றுக்காரன்

என்ற முறையில், 'ன்' விகுதி போட்டுப் பேசக்கூடியவர், 'ர்' விகுதி போட்டுப் பேசியிருக்கிறாரே -- அது ஒரு வகையில் முன்னேற்றம் தானே !

எப்போதுமே அவர் சில நாட்கள் மௌனமாக இருந்துவிட்டுப் பிறகு பேசினாலே -- இப்படித்தான் !

அன்று 'மௌன ஊர்வலத்'தில், இரண்டு மணி நேரத்திற்கு மேலாக மௌனமாக வந்தார் அல்லவா -- அதன் விளைவாக இந்த அர்ச்சனைகள் எனக்கு !

எழுத்தும் பிறழாமல் அவருடைய பத்திரிகையில் வந்துள்ள அவரது பேச்சில் சிந்திய முத்துக்கள்தான் நான் குறிப்பிட்டிருப்பவை.

'ஒன்பது ஆண்டுக் காலம் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவர் இப்படிப் பேசியிருக்கிறாரே' என்று -- உடன்பிறப்பே -- நீ ஆச்சரியப்படுவாய்; ஆச்சரியம் அதுவல்ல; 'இப்படிப் பேசக்கூடியவர் ஒன்பதாண்டுக் காலம் முதல்வராக இருந்தாரே' என்பதுதான் பெரிய ஆச்சரியம் !

'இந்த அர்ச்சனைகளுக்கு என்ன பதில் தருவது' என்று நாம் மயங்கப் போவதில்லை; ஏனெனில், இந்தப் பெரியவரின் அர்ச்சனை, இப்போதா -- புதிதாக நமக்குக் கிடைக்கிறது? நாம் பிறந்த காலத்திலிருந்தே -- கழகம் பிறந்த காலத்திலிருந்தே நமக்குப் பழக்கப்பட்டுப்போன 'பாடல்' அது !

இதுபோன்ற அர்ச்சனைகள் வரும்போது, நமக்குப் பழைய நிகழ்ச்சி ஒன்றுதான் நினைவுக்கு வரும்; ஞானி ஒருவரை -- அவர் காலத்து எதிரிகள், வசை மொழியால் -- இழிமொழியால் அர்ச்சனை செய்துகொண்டே இருந்தனர்; ஞானியின் சீடர்கள் அவரைப் பார்த்து, 'அவர்கள் அப்படி வசை மொழிகளை உங்கள்மீது வீசுகிறார்களே -- நீங்கள் இதற்கு என்ன பதில் தரப்போகிறீர்கள்' என்று கேட்டனர்; அதற்கு அவர், 'சீடர்களே -- நமக்குச் சிலர் பிச்சைப் போடுகிறார்கள் -- ஏற்றுக்கொள்கிறோம்; அப்படி அந்தப் பிச்சையை ஏற்காவிட்டால் என்ன ஆகும் -- அந்தப் பிச்சைப் பொருள் அவர்களுக்கே சேரும்; அதுபோல, நம்மீது வசை பாடுவோரின் வசைமொழிகளை நாம் ஏற்பதில்லை -- அது அவர்களுக்கே திரும்பிப் போகிறது' என்றார்.

அந்த ஞானி வேறு யாருமன்று -- இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் பகுத்தறிவுப் புரட்சி செய்த புத்தர்தான் !

புத்தரின் இந்தக் கதையை நமக்குச் சொல்லி -- அந்தப் புத்தரின் வழிநடந்தவர் நமது அண்ணன் ! அவரிடம் பயிற்சி பெற்ற நாமும், இப்போது காமராசரின் 'அர்ச்சனை'களை ஏற்க மறுக்கிறோம் !

காமராசர் கழகத்தினரைத் தாக்கி வாரி இறைக்கும் வார்த்தைகள் அனைத்தும், நம்மீது வயிற்றெரிச்சல் கொண்டோருக்கு வண்ணத் தமிழ்ச் சொற்கோவைகளாக இனிக்கின்ற காரணத்தால்தான், அவர்கட்கு நமது வடிவம் சிறிதாகத் தெரிகிறது -- அவரது வடிவம் வனப்பாகவும், வசீகரமாகவும், மாமலையாகவும் தெரிகிறது !

காமராசர், என்மீதும் -- உங்கள்மீதும் கர்ணகடூரச் சொற்களை அள்ளி வீசுவதற்கு, உனக்கும் -- ஊருக்கும் காரணம் தெரியாமலா இருக்கும் ?

### புதிய இராமாயணம் இப்போது -- பழைய நிகழ்ச்சிக்கு இடமேது !

வாலி -- சுக்ரீவன் போர் நடைபெறுகிறது; இராமன் மறைந்திருந்து வில் வளைக்கிறான்; 'இது -- இராமாயண காலத்திலே மட்டுந்தான் நடைபெற்ற நிகழ்ச்சி' என்று கருதிக்கொள்ளாதே -- தமிழக அரசியலில் என்றுமே நடைபெறுகின்ற நிகழ்ச்சிதான் !

இராமன் வில் வளைக்கிறான் -- மறைந்திருந்து; வாலி -- சுக்ரீவன் மோதிக்கொள்கிறார்கள்; வாலி வதைப்பட்டலாம் -- பழைய இராமாயணத்தில் !

புதிய இராமாயணத்தில், வாலி வீழ்ந்திடமாட்டான் -- வில் வளைப்போன் வீழ்வான் ! சுக்ரீவன் புத்தி பெறுவான் !

என் 'பாஷை'யில் இவ்வளவுதான் சொல்ல முடியும்; இன்னும் விளக்கமாகச் சொல்லவேண்டுமென்றால், 'பெரியார் பாஷை'தான் தேவைப்படும்."

# கண் சிகிச்சை முகாம்கள் : பேராசிரியர் க. அன்பழகன் வேண்டுகோள்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

முகாம் விருத்தாசலத்திலும் -- பெண்ணாடத்திலும் -- நெய்வேலியிலும் ஒரே நேரத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்படும்.

இத்தகைய முகாம்களை நடத்த நிறைய பொருளுதவி தேவைப்படுகிறது; அதாவது சராசரி ஒரு நபருக்கு ரூ. 50 வீதம் செலவு ஆகும்.

எனவே, அரிமா சங்கங்களும -- சுழற் சங்கங்களும் -- மற்றும் செல்வந்தர்களும் முன்வந்து நிறைய பொருளுதவி தரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

சிதம்பரம் அரிமா சங்கத் தலைவரும் -- அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தருமான டாக்டர் எஸ். பி ஆதிநாராயணா அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

தென்னாற்காடு மாவட்ட கலெக்டர் சண்முகசிகாமணி விழா மலரை வெளியிட்டார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் எம். செல்வராஜ், இராசாங்கம், பொன். சொக்கலிங்கம் மற்றும் டாக்டர் ரெங்கசாமி, பேராசிரியர்கள் இலட்சுமணன், இராசாராம் ஆகியோரும் பேசினர்; தனபால் நன்றி கூறினார்.